தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ அரசின் சாதனை!

# தனிநபர் வருமானத்தில் தமிழ்நாடு இந்தியாவிலேயே இரண்டாவது இடம்!

## புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகப் புள்ளி விவரங்கள்படி, மக்களவையில் ஒன்றிய நிதித்துறை இணையமைச்சர் அறிவிப்பு!

புதுடெல்லி, ஜுலை 23-

ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் அறிவித்தபடி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு 2024-2025-ஆம் ஆண்டில் 9.69 சதவிகித பொருளாதார வளர்ச்சி வீதத்துடன் இந்தியாவிலேயே மிக அதிக வளர்ச்சியை பெற்று மாபெரும் சாதனை படைத்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்துள்ள மிக உயர்ந்த வளர்ச்சி வீதம் இது என பாராட்டப்படுகிறது.

இந்தியாவிலேயே முதல மாநிலமாகத் தமிழ்நாடு இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளதற்கு முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்கள் 2021-இல் பொறுப்பேற்றது முதல் அறிமுகப்படுத்தி நிறைவேற்றிவரும் புதுமையான திட்டங்கள்தான் காரணம்:-

700 கோடி பயண நடைகளுக்கு மேல் மகளிர் பயன்பெறும் கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம் !

4.95 இலட்சம் கல்லூரி மாணவியர்க்கு மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம்!

அதேபோல 3.28 இலட்சம் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம் !

1.15 கோடி இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.1,000 அள்ளி வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் !

4 கோடி மக்களுக்கு மேல் தொற்றா நோய்களுக்கு மருத்துவம் வசதி, ஐ.நா. அமைப்பு பாராட்டிய மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் !

ரூ.660 கோடியில் 95.97 இலட்சம் குழந்தைகள் பயன் பெறும் இல்லம் தேடி கல்வித் திட்டம் !

2 இலட்சத்திற்கு மேலான ஏழை, எளியோர் வீடு கட்ட தலா ரூ.3.50 இலட்சம் வழங்கும் கலைஞர் கனவு இல்லம் திட்டம்!

ரூ.648.12 கோடியில் 10,96,289 உயிர்களைக் காத்துள்ள இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 திட்டம்!

41 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து, 3,28,391 மாணவர்கள் முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள்பெற உதவியுள்ள நான்முதல்வன் திட்டம்!

895 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் குவிந்த 10,14,368கோடி முதலீடுகள் !

இவற்றின் வாயிலாகப் பெருகும் 32,04,895 வேலைவாய்ப்புகள் !

முதலிய திட்டங்களே இன்று பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம்! - புதிய உச்சம் ! எனும் வெற்றிக்கு அடித்தளங்கள் .

இப்படி தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியில் புதிய உச்சங்கள் அடைந்துவரும் வேளையில் மற்றும் ஒரு மணிமகுடத்தை ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்குச் சூட்டியுள்ளது. 21.7.2025 அன்று நாடாளுமன்றத்தில் மக்களவையில் ஒன்றிய நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சவுத்ரி அவர்கள் அளித்துள்ள பதிலில் தனிநபர் வருமானம் தேசிய அளவில் ரூ.1,14,710. இந்திய தேசிய சராசரி தனிநபர் வருமானத்தைவிட உயர்ந்து தமிழ்நாடு ரூ.1,96,309/- பெற்று இந்தியாவிலேயே இரண்டாவது இடம் என அறிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு தொடர்ந்து அடைந்துவரும் வளர்ச்சிகள் சாதனைகள் ஆகியவற்றை எவராலும் மறைத்திட முடியாது. தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு புதிய திட்டங்களை வழங்காத நிலையிலும் தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட வேண்டிய நிதிகளை அளிக்காத நிலையிலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறந்த நிர்வாகத் திறன்களாலும், சீரிய தொலைநோக்குத் திட்டங்களாலும் தமிழ்நாடு தொடர்ந்து சாதனைகள் நிகழ்த்தி வருகிறது என்பதற்கு மற்றும் ஒரு சான்றுதான் நாடாளுமன்றத்தில் ஒன்றிய இணையமைச்சர் வெளியிட்டுள்ள அறிவிப்பாகும்.

குழைந்த உள்ளத்தோடும்

## குழந்தை உள்ளத்தோடும் வாழ்த்துகிறேன்!



என்னரும் சகோதரர்
தமிழ்நாட்டின்
மாண்புமிகு முதலமைச்சர்
திருக்குவளைக் கலைஞரின்
திருச்செல்வர்
தளபதி மு.க.ஸ்டாலின்
மருத்துவமனை சேர்ந்தார்
என்ற செய்திகேட்டுச்
சிந்தை உடைந்தேன்

மருத்துவர்களின்
உள்வட்டாரத்தை உசாவி
அவருக்கு இடர் ஒன்றுமில்லை
என்று அறிந்தபிறகுதான்
அமைதி அடைந்தேன்

உழைப்பு உழைப்பு
எத்துணை உழைப்பு!

அது
உடம்பா? இரும்பா?

முற்றிலும்
குணமடைந்த பிறகு
அவர் வாழ்க்கை முறையைச்
சற்றே மாற்ற வேண்டும்

இனி அவர்
கரும்பில் சாறெடுப்பதுபோல்
உழைக்காமல்
பூவில் தேனெடுப்பதுபோல்
உழைக்க வேண்டும்

இயக்கம்
இன்று நிலைபெற்றிருப்பதே
மூதாதையரின் கொள்கைமீதும்
தளபதியின்
முதுகெலும்பின்மீதும்தான்

முழுநலத்தோடு
அவர் மீண்டு வரவேண்டும்;
தமிழ்நாட்டை நெடுங்காலம்
ஆண்டுவர வேண்டும் என்று
குழைந்த உள்ளத்தோடும்
குழந்தை உள்ளத்தோடும்
வாழ்த்துகிறேன்

- கவிப்பேரரசு வைரமுத்து

ஒன்றிய அரசு ஊழியர்களுக்கான

# எட்டாவது ஊதியக் குழு அமைப்பதில் தாமதம் ஏன்?

## நிதி அமைச்சரிடம் - டி.ஆர்.பாலு, எம்.பி. கேள்வி!



புதுடெல்லி, ஜுலை 23-

மத்திய அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு எதிர்வரும் 2026 ஜனவரித் திங்கள் முதல் புதிய சம்பளம் மற்றும் சலுகைகள் திருத்தி அமைக்கப் படவேண்டும். தற்போதைய ஊதிய விகிதங்கள் ஜனவரி 2016 முதல் ஏழாவது ஊதிய ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மாற்றப் பட்டு அமலில் உள்ளது. இது பத்து ஆண்டு காலத்துக்கு நடைமுறையில் இருக்கும் . எனவே ஜனவரி 2026 முதல் மத்திய அரசின் அலுவலர்கள், அதிகாரிகள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் என அனைவருக்கும் உயர்த்தப் பட்ட ஊதிய அமைப்பு செயல்பாட்டுக்கு வரவேண்டும்.

இந்நிலையில் , ஒன்றிய அரசின் வழக்கப்படி சென்ற ஜனவரிமாதத்திலேயே எட்டாவது ஊதிய ஆணையம் அமைக்க ஒன்றிய அமைச்சரவை முடிவு எடுத்ததாக அரசு செய்தி வெளியிட்டது . ஒன்றிய அமைச்சர் அஸ்வின் வைஷ்ணவ் இந்த தகவலை ஊடகக் கூட்டம் வாயிலாக இதனைத் தெரிவித்தார். அப்போது டெல்லி சட்டப் பேரவைத் தேர்தல் அறிவிக்கை தேர்தல் ஆணையத்தால் வெளியிடப் பட்ட நிலையில் கட்சிகளின் பிரச்சாரம் கூட துவங்கி விட்டிருந்தன என்பதும் குறிப்பிடத் தக்கது. இருப்பினும் ஆறுமாத காலம் கடந்த பிறகும் எட்டாவது ஊதிய ஆணையம் அமைப்பதற்கான எந்த அறிகுறியும் இதுகாறும் இல்லாததால் நேற்று முன்தினம் (21.7.2025) தொடங்கிய நாடாளுமன்ற மழைக் கால கூட்டத் தொடரின் முதல் நாளிலேயே இந்த விஷயம் குறித்து மக்களவையில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற த் தொகுதி திமுக உறுப்பினரும், தி.மு.க. மக்களவைக் குழுவின் தலைவருமான டி.ஆர்.பாலு வினா எழுப்பினார்.

அது வருமாறு:-

ஊதிய ஆணையம் எப்போது அமைக்கப்படும்?

எட்டாவது ஊதிய ஆணையத்தின் தலைவர்கள், உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு எப்போது அரசிதழில் அறிவிக்கை வெளியாகும்? ஊதியக்குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்ட பின் எப்போது புதிய சம்பளம்? ஒன்றிய அரசின் அலுவலர்களுக்கும், அது போல உயர்த்தப்பட்ட பென்சன் ஓய்வூதியர்களுக்கும் எப்போது நடைமுறைக்கு வரும் என்று தனது கேள்வியில் டி.ஆர். பாலு எம்.பி. நிதி அமைச்சரிடம் வினவினார்.

இந்தக் கேள்விக்கு ஒன்றிய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் சார்பாக நிதித்துறையின் இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி அவர்கள் நேற்று முன்தினம் (21.7.2025) பதில் அளித்தார். எழுத்துப்பூர்வமாக மக்களவையில் இணை அமைச்சர் அளித்த தனது பதிலில் தெரிவித்ததாவது:

“ எட்டாவது ஊதிய ஆணையம் அமைக்க ஒன்றிய அரசு முடி வெடுத்துள்ளது. இது தொடர்பாக முக்கியமாக அக்கறை கொண்ட பாதுகாப்பு, உள்துறை உள்ளிட்ட அமைச்சகங்களுடன் ஆலோசனை மேற்கொள்ளப் பட்டுள்ளது. அதன் பிறகு ஊதிய ஆணையம் தொடர்பான அறிவிக்கை வெளியிடப் படும். அதன் பின் ஊதிய ஆணையத்தின் தலைவர் நியமிக்க படுவார். ஆணையத்தின் பரிந்துரைகள் கிடைத்தபிறகு, அவற்றின் மீது அரசு முடிவெடுத்த உடன் புதிய சம்பள விகிதங்கள் நடைமுறைக்கு வரும்.”

நாடாளுமன்றத்தில் ஒன்றிய நிதித்துறை ளஅமைச்சர் அளித்துள்ள இந்த பதிலில் எட்டாவது ஊதியக்குழு அமைப்பது குறித்தோ, தலைவர் நியமனம் பற்றியோ, ஒன்றிய அரசின் ஒன்றேகால் கோடி ஊழியர்கள் மற்றும் ஓய்வூதிய தாரர்கள் மிகவும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஊதிய, ஓய்வூதிய உயர்வு குறித்தோ எவ்வித தெளிவான உறுதியான தகவல் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# திசையன்விளை பணிமனையில் புதிய கட்டடம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு திறந்து வைத்தார்!

நெல்லை.ஜுலை.23.

நெல்லை மாவட்டம், திசையன்விளை பணிமனையில் நேற்று (22.07.2025) நடைபெற்ற இராதாபுரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள தொழிலாளர்கள் காத்திருப்பு அறை துவக்க விழா நிகழ்வில் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் முன்னிலையில் அறையினை திறந்து வைத்தார்.

பின்னர் சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது.

திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக,மகளிர் விடியல் பயணம் திட்டத்தின் கீழ் மகளிர்கள் நகரப் பேருந்துகளில் ஒரு நாளைக்கு எத்தனை முறை பயணித்தாலும் கட்டணமில்லாமல் பயணிக்கலாம் என்ற அற்புதமான திட்டத்தின் மூலம் ஏழை,எளிய பெண்கள் பயன் பெற்று வருகிறார்கள்.

இன்றையதினம்,போக்குவரத்து தொழிலாளர்களின் நலன் கருதி திசையன்விளை பணிமனையில் இராதாபுரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள தொழிலாளர்கள் காத்திருப்பு அறை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தை பொறுத்தமட்டில் மற்ற மாவட்டங்களைவிட அதிகமான பேருந்துகள் இயங்கி கொண்டிருக்கிறது.

போக்குவரத்துத்துறை ஊழியர்கள் பேருந்தை இயக்கும் பொழுது சிறப்பாக இயக்கி பொது மக்களை கவனத்துடன் கொண்டு சேர்கிறார் கள்.அவர்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு சட்ட பேரவைத்தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில் அரசு போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குனர் நடராஜன், பொது மேலாளர் பாலசுப்பிரமணியன்,வணிக மேலாளர் பூல் ராஜ்,மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சாந்தி சுயம்பு உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

# இலாபத்தில் இயங்கும் என்.எல்.சி.யில் தமிழ்நாட்டுக்கு ஈவுத் தொகை வழங்குவதில்லை!

## மாநிலங்களவையில் - கழக உறுப்பினர் இரா.கிரிராஜன் குற்றச்சாட்டு!



புதுடெல்லி, ஜுலை 23-

லாபம் ஈட்டும் நிறுவனமாக என்.எல்.சி. இருந்தாலும், அதில் தமிழ்நாடு அரசு பங்குகள் எதையும் வைத்திருக்காததால், லாபத்தில் பங்கோ, ஈவுத்தொகையோ வழங்க வேண்டியதில்லை என தி.மு.க. எம்.பி. கிரிராஜன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

என்.எல்.சி.யிலிருந்து கடந்த 5 ஆண்டுகளில் கிடைத்த லாபம் மற்றும் அதில் தமிழ்நாடு அரசுடன் பகிரப்பட்ட விவரங்கள் குறித்து பதிலளிக்கும்படி, ஒன்றிய அரசின் நிலக்கரித் துறை அமைச்சருக்கு கழக மாநிலங்களவை உறுப்பினர் இரா.கிரிரஜன் கேள்விகளை எழுப்பி இருந்தார்.

அதில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமான என்.எல்.சி.-யின் சுரங்க பணிகள் மூலம் கடந்த 5 ஆண்டுகளில் அதிக லாபம் ஈட்டியுள்ள நிலையில், அந்த லாபத் தொகை எவ்வளவு, ஈவுத் தொகை எவ்வளவு? தமிழ்நாடு அரசு 5 சதவிகித பங்குகளை பெற்றுள்ளதா? அதன் விவரங்கள் என்ன? மாநில அரசுக்கு கொடுக்கப்பட்ட ராயல்டி தொகை எவ்வளவு? என்ற கேள்விகளை எழுப்பி இருந்தார்.

திமுக எம்.பி. கிரிராஜனின் கேள்விகளுக்கு பதிலளித்துள்ள ஒன்றிய அரசின் நிலக்கரித் துறை அமைச்சர் ஜி.கிஷன் ரெட்டி, என்.எல்.சி. சுரங்கப் பணிகள் மற்றும் மின் உற்பத்தி மூலம் வருவாயைப் பெறுவதாகவும், இருப்பினும் சுரங்கப் பணிகளுக்கான தனியாக லாபத் தொகை விவரங்கள் வெளியிடப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

2020-21 முதல் 2024-25 வரையிலான கடந்த 5 நிதியாண்டுகளில் வரிக்கு பிந்தைய லாபமாக 7,242.05 கோடி ரூபாயை என்.எல்.சி. ஈட்டியுள்ளதாகவும், அதில் ஒன்றிய அரசின் ஈவுத்தொகையாக 1,871.97 கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளதாகவும் விளக்கம் அளித்துள்ளார்.

தமிழ்நாடு மாநில அரசு என்.எல்.சி. இந்தியா லிமிடெட்டில் தனி பங்குகளை வைத்திருக்கவில்லை, எனவே, தமிழ்நாடு மாநில அரசுக்கு எந்த ஈவுத்தொகையும் வழங்கப்படவில்லை.

என்.எல்.சி. நிறுவனத்தில் தமிழ்நாடு அரசு எந்த பங்கையும் வைத்திருக்காததால், மாநில அரசுடன் எந்த லாபத்தையும் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை எனவும், ஈவுத்தொகையும் பகிர்ந்துகொள்ளப்படவில்லை எனவும் பதில் கூறியுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதி ஆர் கே பேட்டை மேற்கு ஒன்றியம் வீரமங்கலம் கிராமத்தில் அரசு வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் ரூபாய் 62 லட்சத்தின் மதிப்பீட்டில் பழங்குடியினர் மக்களுக்கு 15 வீடுகளை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல். ஏ, திறந்து வைத்து வீட்டு உபகரண பொருட்கள் வழங்கினார் உடன் ஒன்றிய செயலாளர்கள் மா. இரகு, பா.சம்பத், முன்னாள் ஒன்றிய குழு துணை தலைவர் திலகவதி ரமேஷ், நிர்வாகிகள் ஆர்.எம்.கணேசன், ஏ.கே. திருவேங்கடம், பன்னீர்செல்வம், திருஞானம், சி.மணி, சந்தோஷ், முரளி, நவீன், ஹகுப், ராஜா, தயாளன், சுந்தர்ராஜ், உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

118–வது வட்டத்தில் அண்ணா அறிவாலயம் பொன். தனபால் முயற்சியில்

# ரூ.4.99 லட்சத்தில் உயர்கோபுர மின்விளக்கு!

## கல்வெட்டினை கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை திறந்துவைத்தார்!





சென்னை, ஜுலை 23-

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி 118-ஆவது வட்டத்தில் அண்ணா அறிவாலயம் பொன். தனபால் முயற்சியில் ரூ.4.99 லட்சத்தில் அமைக்கப் பட்ட உயர் கோபுர மின் விளக்கினை கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை திறந்து வைத்தார்.

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி, சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி, 118வது வட்டம், போயஸ் சாலையில், பொது மக்களின் சிரமத்தை போக்கும் வகையிலும் அப்பகுதி மக்கள் “உயர்கோபுர மின் விளக்கு” அமைத்துத்தர வேண்டுமென்ற நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகை யிலும், கழக துணைப் பொதுச்செயலாளரும் - கழக மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராஜ், எம்.பி., தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 4.99 லட்சம்மதிப்பீட்டில்அண்ணா அறிவாலயம் பொன். தனபால் முயற்சியால் அமைக்கப் பட்ட “உயர்கோபுர மின்விளக்கு திறப்பு விழா” கடந்த 17.07.2025 அன்று மாலை, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை அவர்கள் கல்வெட்டினை திறந்து வைத்திட, உயர்கோபுர மின்விளக்கினை மக்கள் பயன்பாட்டிற்காக இயக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் ப.செல்வராஜ், எம்.பி., சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம்விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எழிலன் நாகநாதன், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் கலைகதிரவன், பகுதி செயலாளர் மா.பா. அன்புதுரை, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய், பொதுக்குழு உறுப்பினர் யோகேஷ் ரவி, மாமன்ற உறுப்பினர் திருமதி மல்லிகா யுவராஜ், அண்ணா அறிவாலயம் பொன்.தனபால், வட்டச் செயலாளர்கள் எஸ்.என்.கே.ராமன், கோ.யுவராஜ், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் இ.ஏழுமலை, மருத்துவர் கலாநிதி, வடிவமைப்பாளர் தாராபுரம் கே.பாப்புகண்ணன், மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.